27.01.2026.

O.S.No.142/2022

PW2- முத்துசாமி– த/பெ. வெங்கடாசலம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.01.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கும், என் பெரியப்பாவிற்கு வழிபாதை சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் அப்பாவுடன் எத்தனை நபர்கள் பிறந்தார்கள் என்றால் மொத்தம் 9 நபர்கள் என் அப்பாவையும் சேர்த்து.

2. குமாரசாமி, முருகன் இருவரும் என் அப்பா உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான்.

3. என் உடன் எத்தனை நபர்கள் பிறந்தார்கள் என்றால் ஒரே சகோதரி தனலெட்சுமி.

4. என் அப்பா எப்போது இறந்தார் என்றால் சுமார் 25 வருடத்திற்கு முன்பு இறந்தார். என் தாயார் பெயர் என்ன என்றால் சுப்புலட்சுமி ஆவார்.

5. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது என்னால் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

6. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது என் அப்பாவின் பாக சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

7. பி.வா.சா.ஆ.1ல் பக்கம் எண்.4ல் ஜக்குபந்தியில் குமாரசாமி, முருகன் வீட்டிற்கு தெற்கே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. பி.வா.சா.ஆ.1 ஏற்படுவதற்கு முன்பு எனக்கு என் தாயும், சகோதரியும் 2016ம் வருடம் ஒரு ஏற்பாட்டு ஆவணம் எழுதிவைத்தார்கள் என்றால் சரிதான்.

9. என் இடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றிதழில் என் வீட்டிற்கு வடக்கே குமாரசாமி, முருகன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கணினி வழி பதிவிறக்கம் செய்யப்பட்ட வில்லங்க சான்றிதழ் பி.வா.சா.ஆ.2 ஆக வா.சா.2 குறுக்கு விசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

10. எனக்கு என் அப்பாவின் பாக உடன்படிக்கையின் கிடைக்கப்பெற்ற சொத்தை தான் பி.வா.சா.ஆ.1 கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

11. என் அப்பாவின் பாக உடன்படிக்கை பத்திரத்தில் 5ம் இலக்கமாக காண்பிக்கப்பட்ட சொத்து என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

12. பாக அட்டவணை வா.சா.ஆ.1ன் 5ம் இலக்க சொத்தின் தபசில் விபரத்தில் 1ம் தபசில் 43ம் நம்பர் மனை வீட்டிற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. தபசில் சொத்தில் எந்த பொது நடைபாதையும் இல்லை என்றும் என் அப்பா பெயரில் உள்ள பாக உடன்படிக்கையிலோ, என் தாயார் மற்றும் சகோதரி எழுதிக் கொடுத்த ஏற்பாட்டு ஆவணத்திலோ, பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலோ என் வீட்டிற்கு வடக்கே குமாரசாமி, முருகன் இடம் தான் துலங்கும் என்றும் நடைபாதையே அங்கு இல்லாத பட்சத்தில் வாதி தபசில் சொத்தில் பொது நடைபாதை உரிமை உள்ளது என கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

14. வாதி அரிசி கடைக்கு முன்பு கதவு வைத்த வழி இருந்தது என்றால் முன்பு இருந்தது தற்போதைய நிலவரம் தெரியவில்லை. வாதி எனது பெரியப்பா என்பதால் இல்லாத வழியை பொதுநடைபாதை எனக்கூறி அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.